சுற்றறிக்கை எண் 35/01/005/0010/22 2018 நவெம்பர் 26

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

**உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 இலக்க சுற்றறிக்கை தொடர்பானது.

உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகளுக்காக வெளிநாட்டு நாணயத்தினூடாக நாணயக் கடிதத்தினை திறப்பதற்கு ஏற்புடைத்தான குறைந்தபட்ச காசு அளவு 100 சதவீதமாக இருக்கும் என்பது பற்றி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் மேலும் அறிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு நாணயத்தினூடாக நாணயக்கடிதத்தினை திறக்கின்ற நேரத்தில் பின்வரும் நிபந்தனைகளும் ஏற்புடைத்தாக இருக்கும்.

1. இறக்குமதி உண்டியல், வங்கியுடன் பேணப்படும் அளவு வைப்புக்களில் பயன்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நாணயங்களில் தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.
2. நாணயக் கடிதத்தினைத் திறக்கும்பொழுது குறைத்து மதிப்பிடப்பட்ட பொருட்பட்டியல் இருக்கக்கூடாது.
3. 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/001/005/0010/21 இலக்க கொண்ட சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள்

வங்கிகள் 2018 நவெம்பர் 26ஆம் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை இச்சுற்றறிக்கைக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**பணிப்பாளர் உள்நாட்டு தொழிற்பாடுகள்**